

# சீறத்துன்னபி ﷺ

## நாள் 11

# இன்றைய தலைப்புகள்

- பகுதி 1: அர்கமின் இல்லத்தில் அழைப்புப் பணி
- பகுதி 2: குரைஷிகள் ஒன்றுபட்டு அபுதாலிபுக்கு அழுத்தம் கொடுப்பது
- பகுதி 3: குர்ஆன் ஓதுவதை தடை செய்தல்
- பகுதி 4: மூத்த குரைஷி தலைவர்கள் குர்ஆனை ரகசியமாக கேட்பது
- பகுதி 5: நபி (ஸல்) அவர்களை கேலி செய்ய பயன்படுத்தப்பட்ட தந்திரங்கள்
- பகுதி 6: அல் வலீத் இப்னு அல் முகீராவின் சம்பவம்

# பகுதி 1: அர்கமின் இல்லத்தில் அழைப்புப் பணி

- முஸ்லிம்களின் எண்ணிக்கை பன்னிரண்டுக்கு மேல் அதிகரித்ததால், அவர்கள் ஒன்றுகூடுவதற்கு ஒரு இடம் தேவைப்பட்டது.

- அந்த நேரத்தில் தொழுகை கட்டாயமாக்கப்படவில்லை; அதை விரும்பியவர்கள் மட்டுமே தொழுது வந்தனர். ஆனால், இஸ்லாமியர்களுக்கு குர்ஆனையும், இஸ்லாத்தின் போதனைகளையும் கற்க ஒரு இடம் தேவைப்பட்டது.

- மேலும், பல முஸ்லிம்கள் தங்கள் இஸ்லாத்தை தழுவியதை ரகசியமாக வைத்திருந்தனர். இதனால், பொது இடங்களில் சந்திப்பது அவர்களின் பாதுகாப்பிற்கு பாதகமாக அமைந்துவிடும் என கருதினர்.

- எனவே நபி (ஸல்) அவர்கள் அர்கம் இப்னு அபி அல்–அர்கமின் வீட்டைத் தேர்ந்தெடுத்தார்கள். அது பின்னர் 'தாருல் அர்கம்' என்று அழைக்கப்பட்டது.

- அர்கம் (ரலி) அவர்கள், அபூஜஹ்ல் பிறந்த பனு மக்ஜூம் கோத்திரத்தைச் சேர்ந்தவர். மேலும், அவர் தான் இஸ்லாத்தைத் தழுவியதை ரகசியமாக வைத்திருந்தார்.

- இந்த அரசியல் சூழலில் பனூ ஹாஷிம் மக்களுக்கு, பனு மக்ஜூம் மக்கள் பாதுகாப்பு கொடுப்பார்கள் என யாரும் சந்தேகிக்க மாட்டார்கள். இது தாருல் அர்கமின் செயல்பாடுகளை ரகசியமாக வைத்திருக்க உதவியது. இதனால் மக்கா மக்களிடையே எந்த சந்தேகமும் வரவில்லை.

- மேலும், அந்த வீடு பரபரப்பான பகுதியான மக்காவின் மையத்தில் அமைந்திருந்தது. அம்மாதியான இடத்தில் ஒரே நேரத்தில் 20 – 30 பேர்கள் வீட்டிற்குச் சென்று வருவது மிகவும் சாதாரணமான நிகழ்வாக இருந்தது. மாறாக, மக்காவின் புறநகர் பகுதியில் இந்த வீடு இருந்திருந்தால், மக்காவிலிருந்து அவ்வளவு பேர்கள் கிளம்பி இங்கு வந்து செல்வது சந்தேகத்தை ஏற்படுத்தியிருக்கும்.

- தாருல் அர்கம் முஸ்லிம்களின் மையமாக மாறியது. இஸ்லாத்தைக் கற்பித்தல், பிரார்த்தனை செய்வது மற்றும் வருங்கால திட்டத்திற்கான உத்திக்களை வகுக்கும் மையமாகவும் அது திகழ்ந்தது.

## பகுதி 2: குரைஷிகள் ஒன்றுபட்டு அபுதாலிபுக்கு அழுத்தம் கொடுப்பது


- நபி (ஸல்) அவர்களின் போதனைகளால் குரைஷிகள் அதிகமாக கலக்கமடைந்தனர். நபி (ஸல்) அவர்கள் சிலை வணக்கத்தை கண்டித்ததால், குரைஷிகள் அதை தங்களது, தங்கள் முன்னோர்கள், அவர்களின் கலாச்சாரம் மற்றும் அவர்களின் கவுரவத்தின் மீதான தனிப்பட்ட அவமானமாகக் கருதினர்.

- குரைஷிகளின் தலைவர்கள் அனைவரும் ஒன்றுபட்டு பனு ஹாஷிமின் தலைவரான அபுதாலிபிடம் வந்தனர்.

- மக்காவில் உள்ள மிகவும் உன்னதமான இளைஞரான அல் வலீத் இப்னு முகீராவின் மகனை தேர்ந்தெடுத்து, அவர்கள் ஒரு முன்மொழிவுடன் வந்தனர்.

- அவர்கள் இந்த இளைஞனை அபுதாலிபிடம் ஒப்படைப்பார்கள்; பதிலுக்கு அபுதாலிப், நபி (ஸல்) அவர்களை குரைஷிகளிடம் ஒப்படைக்கவேண்டும். அவர்கள் தங்கள் விருப்பப்படி, நபி (ஸல்) அவர்களை எதுவேண்டுமென்றாலும் செய்வார்கள்.

- இதைக் கேட்ட அபுதாலிப் மிகவும் கோபமடைந்து, ‘‘இது ஒரு முட்டாள்தனமான, கொடூர பேரம். உங்கள் மகன்களில் ஒருவரை நான் கவனித்துக் கொள்ள வேண்டும் என்று நீங்கள் விரும்புகிறீர்கள்; அதற்குப்பதிலாக நான் நன்றாக வளர்த்த என் மகனை அழைத்துச் சென்று அவரை கொல்வீர்கள்!’’, என்று கூறினார்.



- குரைஷிகளில் மூத்தவர் எழுந்து, ''உங்கள் மக்கள் உங்களால் முடிந்த எல்லாவற்றையும் செய்து விட்டார்கள். இப்போது நாங்கள் கொடுத்த எதாவது ஒன்றை நீங்கள் ஏற்றுத்தான் ஆகவேண்டும்'', எனக் கூறினார்.

- இது அடிப்படையில் மக்கா முழுவதும் அபுதாலிபுக்கு எதிராக ஒலித்த குரலாக இருந்தது.

- ஆனால் அல்லாஹ் அபுதாலிபுக்கு பலத்தையும், தைரியத்தையும் கொடுத்தான். அதற்கு அவர், ''இது நீங்கள் போட்ட சதி. உங்கள் இஷ்டப்படி செய்து கொள்ளுங்கள். நான், என் நிலையிலிருந்து விலகப் போவதில்லை'', என்று பதிலுரைத்தார்.

- அபுதாலிப் பின்னர் குரைஷிகளைக் கண்டித்து, அவர்கள் செய்யும் துரோகத்தை கவிதைகளாக பாடிவிட்டார். இதைக்கேட்ட குரைஷிகள் சிறிது நேரத்தில் பின்வாங்கிவிட்டனர்.

- தமது திட்டம் அபுதாலிபிடம் பலிக்கவில்லை என்பதை குரைஷிகளின் தலைவர்கள் புரிந்து கொண்டனர். இதனால் அவர்கள் நபி (ஸல்) அவர்களின் பிரசங்கத்தை நிறுத்த வேறு வழிகளைக் கண்டுபிடிக்க வேண்டும் என எண்ணினர்.

## பகுதி 3: குர்ஆன் ஓதுவதை தடை செய்தல்

- இஸ்லாத்தின் பரவலைத் தடுக்க குரைஷிகள் பல்வேறு தந்திரங்களைப் பயன்படுத்தத் தொடங்கினர்.

- முதலாவதாக, பொது இடங்களில் குர்ஆன் ஓதுவதைத் தடை செய்ய முயன்றனர்.

- நபி (ஸல்) அவர்கள் குர்ஆனை உரக்கப் படிக்கும் போதெல்லாம், அவர்கள் கத்தி, கூச்சலிட்டு ஆர்ப்பாட்டம் செய்து, அவர்கள் ஓதுவதை நிறுத்த முயல்வார்கள்.

- இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள் கூறியதாவது: ''நபி (ஸல்) அவர்கள் கஃபாவின் முன் குர்ஆனை ஓதும்போதெல்லாம், அல்லாஹ்வையும் அவனது தூதரையும் சபிப்பார்கள்''. - ஸஹீஹ் அல்-புகாரீ.

- நபி (ஸல்) அவர்களைத் தவிர வேறு யாரும் இதுவரை பொது இடங்களில் குர்ஆனை ஓதவில்லை.

- நபி (ஸல்) அவர்கள் பெரிய பாதிப்பில்லாமல் இதைச் செய்ய முடிந்ததற்குக் காரணம் அவர்களது குடும்பப் பரம்பரை, மற்றும் அவர்கள் பனு ஹாஷிமின் குலத்தைச் சேர்ந்தவராகவும், அபுதாலிபின் சகோதரர் மகனாகவும் இருந்ததன் மூலம் வந்த பாதுகாப்பு, அவர்களுக்கு உதவியாக இருந்தது.

- ஸஹாபாக்கள் தாருல் அர்கமில் ஒன்று கூடி, அவர்களில் ஒருவர் பொது இடங்களில் குர்ஆனைப் பகிரங்கமாக ஓதி, மக்களின் மனநிலையை அளவிட வேண்டும் என்று முடிவு செய்தனர்.

- இதற்கு அப்துல்லாஹ் இப்னு மஸ்ஊத் (ரலி) முன்வந்தார்கள். ஆனால், அவர் குரைஷிகளை சேர்ந்தவர் அல்ல என்பதால், மற்ற ஸஹாபாக்கள் அவரைத் தடுக்க முயன்றனர். ஆனால் இப்னு மஸ்ஊத் (ரலி) தனது முடிவை மாற்றிக்கொள்ளவில்லை.

- ஒரு நாள் இப்னு மஸ்ஊத் (ரலி) அவர்கள் கஃபாவிற்கு சென்று அதன் அருகிலுள்ள மக்காம்–இ–இப்ராஹிம் பக்கத்தில் இருந்துகொண்டு 'அர்ரஹ்மான்' ஸூராவை அழகான குரலில், மிக உரக்க ஓதத் தொடங்கினார்.

- மக்கள் அவரைச் சுற்றி திரளத் தொடங்கினர். அவர்களில் பலர் இதற்கு முன் குர்ஆனைக் கேட்டதில்லை. அவர்கள் இப்னு மஸ்ஊதின் அழகிய குரலில் மயங்கி, வியந்து, அங்கேயே நின்றார்கள்.

- ஆனால், கூட்டத்தில் இருந்தவர்களில் ஒருவன், ''இது நபி (ஸல்) அவர்கள் ஓதும் வசனங்கள்'', என்று கூறினார். இதைக் கேட்டவுடன், மக்கள் இப்னு மஸ்ஊத் (ரலி) மீது பாய்ந்து, மேலும் அவர் ஓத முடியாதபடி அவரை அடிக்கத் தொடங்கினர்.

- இதனால் இரத்தம் தோய்ந்த காயங்களுடன் இப்னு மஸ்ஊத் (ரலி) அவர்கள் ஸஹாபாக்களிடம் திரும்பி வந்தார்கள்.

- ஸஹாபாக்கள் அவரிடம், இதைத்தான் தாங்கள் முன்பு அஞ்சியதாக சொன்னார்கள். ஆனால், இப்னு மஸ்ஊத் (ரலி), ''அல்லாஹ்வின் மீது ஆணையாக! குரைஷிகள் மீதான எனது அவமதிப்பு அதிகரித்ததைத் தவிர இன்று வேறு எதுவும் மாறவில்லை. நாளையும் இதையே செய்ய நான்

தயாராக இருக்கிறேன்'', எனக் கூறினார்கள்.

## பகுதி 4: மூத்த குரைஷி தலைவர்கள் குர்ஆனை ரகசியமாக கேட்பது

- குரைஷிகளின் மூத்த தலைவர்களான அபூஜஹ்ல், அபூசுஃப்யான் மற்றும் அல் அக்னாஸ் ஆகிய மூவருக்கும் குர்ஆன் வசனங்களைக் கேட்க வாய்ப்பு கிடைத்தது. அவர்கள் அதைக்கேட்டு மயங்கினர். இருப்பினும், அவர்களின் கவுரவம் காரணமாக, குர்ஆன் வசனங்களை பொதுவெளியில் கேட்க அவர்கள் தயாராக இல்லை.

- எனவே அவர்கள் அதைக் கேட்க இரவு வரை காத்திருந்தனர்.

- நபி (ஸல்) அவர்கள் ஒவ்வொரு இரவும் தஹஜ்ஜத் தொழுவார்கள். அதுவே, அவர்களது வீட்டிற்கு வெளியில் இருந்து குர்ஆனை கேட்க சரியான வாய்ப்பாக இருந்தது.

- அவர்கள் ஒவ்வொருவரும், மற்ற இருவருக்கும் தெரியாது என எண்ணி, இரவில் புறப்படுவார்கள். தஹஜ்ஜுத்தின் போது நபி (ஸல்) குர்ஆன் ஓதுவதைக் கேட்டுவிட்டு திரும்பி வரும் வழியில், ஃபஜ்ர் நேரத்தில் ஒருவரையொருவர் சந்திக்க நேர்ந்துவிடும். அவர்கள் சங்கோஜப்பட்டு, ஏதாவது சாக்குப்போக்கு சொல்லிவிட்டு அவர்களது வீடுகளுக்கு திரும்பி விடுவார்கள்.



* இவ்வாறு தொடர்ந்து மூன்று இரவுகள் நடந்தது. இறுதியாக அம்மூவரும் தாங்கள் செய்ததை ஒப்புக்கொண்டனர். மேலும், இதை வேறு யாராவது பார்த்துவிடக்கூடாது என்பதால், அவர்கள் இனிமேல் வரக்கூடாது என்று ஒப்பந்தம் செய்துகொண்டனர்.

* அல் அக்னாஸ், அபூசுஃப்யானை அணுகி, ‘‘குர்ஆன் பற்றி என்ன நினைக்கிறீர்கள்’’ என்று கேட்டார். அதற்கு அபூசுஃப்யான், தனது கவுரவத்தை சமரசம் செய்ய விரும்பாமல், தனக்கு சில பகுதிகள் புரிந்தது என்றும், சில பகுதிகள் புரியவில்லை என்றும் கூறினார்.

* அல் அக்னாஸ், அபூஜஹ்லை அணுகி இதையே கேட்டபோது அவன் வெளிப்படையாக பதிலளித்தான்: ‘‘நாங்கள், பனு மக்ஜும் மற்றும் பனு ஹாஷிம் கோத்திரத்தார்கள் எப்போதும் போட்டி போட்டுகொண்டு இருப்போம். அவர்கள் யாத்ரீகர்களுக்கு உணவு கொடுக்க ஆரம்பித்ததும், நாங்களும் அவ்வாறே செய்தோம் . அவர்கள் தண்ணீர் கொடுக்க ஆரம்பித்ததும் நாங்களும் அவ்வாறே கொடுத்தோம்’’.

* ‘‘நாங்கள் இரண்டு பந்தயக் குதிரைகளைப் போல இறுதிக் கோட்டை அடைய முயற்சிக்கிறோம். இப்போது அவர்கள் வந்து, தங்களுக்கு ஒரு நபி இருக்கிறார் என்று கூறுகிறார்கள். அவரை அல்லாஹ் வானத்திலிருந்து ஏவுகிறான் என்றும் கூறுகிறார்கள். இதில் நாங்கள் எவ்வாறு போட்டியிட முடியும்? அல்லாஹ்வின் மீது ஆணையாக! நான் உயிருடன் இருக்கும் வரை அதை நான் ஏற்க மாட்டேன்’’, என அபூஜஹ்ல் கூறினான். (இப்னு ஹிஷாம், அல்–சிராஹ் அல்நபவிய்யா)

## பகுதி 5: நபி (ஸல்) அவர்களை கேலி செய்ய பயன்படுத்தப்பட்ட தந்திரங்கள்

* நபி (ஸல்) அவர்களையும், அவர்களுடைய போதனைகளையும் கேலி செய்ய பல தந்திரங்கள் பயன்படுத்தப்பட்டன. நபி (ஸல்) அவர்களை அவமதிக்கவும், கேலி செய்யவும் பல பொய்யான வதந்திகளை பரப்புவதும் அதில் அடங்கும்.

* உதாரணமாக, நபி (ஸல்) அவர்களுக்கு வஹீ வராமல் சில நாட்கள் கடந்தபோது, ஒரு குரைஷிப் பெண், ‘‘உன் ஷைத்தான் இப்போது உன்னைக் கைவிட்டு விட்டான்!’’, என்று கூறினாள். இது நபி (ஸல்) அவர்களை மிகவும் புண்படுத்தியது.



- அப்போது அல்லாஹ் பின்வரும் வசனங்களை இறக்கினான்: ''முற்பகல் மீது சத்தியமாக! ஒடுங்கிக் கொள்ளும் இரவின் மீது சத்தியமாக! உம்முடைய இறைவன் உம்மைக் கை விடவுமில்லை! அவன் (உம்மை) வெறுக்கவுமில்லை!'' – (ஸூரா: அள்ளுஹா 93:1–3)

- குரைஷிகள் முன்னெப்போதும் இல்லாத அளவிற்கு மிகவும் தரம்தாழ்ந்து நபி (ஸல்) அவர்கள் மீதும், நம்பிக்கை கொண்டவர்கள் மீதும் அவதூறுகளையும், பொய்களையும் கூறத் தொடங்கினர்.

- அவற்றில் சில, குர்ஆனில் கூறப்பட்டுள்ளது.

- ''நிச்சயமாக நபி (ஸல்) அவர்களை 'பைத்தியக்காரர்' என்று காஃபிர்கள் கூறுகின்றனர்''. – (ஸூரா அல் கலம் 68:51)

- காஃபிர்கள், ''இந்த நபி பொய் சொல்லும் சூனியக்காரர்'' என்றார்கள். – (ஸூரா ஸாத் 38:4)

- மேலும் அவர்கள் குர்ஆனைப் பற்றி இவ்வாறு கூறினார்கள்: ''இந்த குர்ஆன் நபி (ஸல்) அவர்களே இட்டுக்கட்டிக் கூறிய ஒரு பொய்யான செய்தி; மேலும் சிலர் அவருக்கு உதவியுள்ளனர்''. – (ஸூரா அல் ஃபுர்ஃகான் 25:4).

- இது போதாதென்று, அபூஜஹ்லும், அபூலஹபும் மக்காவின் எல்லையில் நின்றுகொண்டு, நபி (ஸல்) அவர்கள் ஒரு மந்திரவாதி என்றும், அவருடைய பேச்சைக் கேட்பது உங்கள் முன்னோர்களின் கடவுள்களிடமிருந்து உங்களைத் திருப்பிவிடும் என்றும், அங்கு வரும் பயணிகளிடம் கூறுவார்கள்.

- இவ்வாறு செய்த சூழ்ச்சிகள் சில மக்களை இஸ்லாத்தில் இருந்து விலக்கி வைத்தாலும், அதுவே சிலரின் மனமாற்றத்திற்கு வழிவகுத்தது.

- 'திமாத் அல் அஸ்தி' என்பவர் ஒரு யமன் நாட்டு குடியினரின் தலைவராக இருந்தவர். அவர் இந்த பொய்ப்பிரச்சாரத்தை கேட்டு அதை நம்பி, குர்ஆன் ஓதப்பட்டால் தான் அதைக் கேட்காமல் இருக்கவேண்டும் என்பதற்காக, அவர் தனது காதுகளில் பஞ்சை வைத்து அடைத்துக்கொள்வார்.

- ஒரு கட்டத்தில், அவர் தனது செயல்களைக் கேள்விக்குள்ளாக்கி, ''நான் ஒரு மருத்துவர். அதனால் நான் முயற்சி செய்து அவரை குணப்படுத்துவேன்'', என தனக்குத்தானே கூறிக்கொண்டார். அவர் நபி (ஸல்) அவர்களை அணுகி, ''நீங்கள் ஒரு பைத்தியக்காரன் என்று கேள்விப்பட்டேன்; நான் உங்களை குணப்படுத்த வந்துள்ளேன்'' என்று கூறினார்.

- அதற்கு நபி (ஸல்) அவர்கள், ''நான் பைத்தியக்காரன் அல்ல! நான் கூறுவதைக் கேளுங்கள்'' என்று பதிலளித்துவிட்டு பின்னர், அவர்கள் குத்பா அல் ஹாஜாவை ஓதத் தொடங்கினார்கள். (இது ஒரு முஸ்லிமின் சில செயல்களுக்கு ஒரு அறிமுகத்தை அளிக்கிறது). நபி (ஸல்) அவர்கள் அதிலுள்ள குர்ஆன் வசனங்களை ஓதத் தொடங்குவதற்கு முன்பே, அந்த மனிதர் ''நிறுத்துங்கள்! நீங்கள் இப்போது சொன்னதை மீண்டும் திரும்பச் சொல்லுங்கள்!'', எனக் கூறினார்.

- நபி (ஸல்) அவர்கள் குத்பா அல் ஹாஜாவை திரும்ப ஓதினார்கள். உடனே அந்த மனிதர், ''அல்லாஹ்வின் மீது ஆணையாக! இதை விட அழகான எதையும் நான் கேட்கவில்லை. நீங்கள் யார்?'' எனக்கேட்டார். நபி (ஸல்) அவர்கள் தன்னை ஒரு இறைத்தூதர் என்று அறிவித்தார்கள். திமாத் உடனடியாக இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டார்.

## பகுதி 6: அல் வலீத் இப்னு அல் முகீராவின் சம்பவம்

- மக்காவின் கவிஞர்கள் அரபு மொழியில் தேர்ச்சி பெற்றவர்கள். அவர்களின் கவிதைகள் அவர்களின் புகழை பறைசாற்றியது. மிகவும் திறமையான கவிஞர்கள் மிகவும் செல்வாக்கு மிக்கவர்களாகவும், மரியாதைக்குரிய நபர்களாகவும் போற்றப்பட்டனர்.

- அவர்களில் மிகப் பெரிய கவிஞர் அல் வலீத் இப்னு அல் முகீரா என்பவர் ஆவார். இவர் பனு மக்ஜூம் கோத்திரத்தாரின் தலைவரும், காலித் இப்னு அல்

வலீதின் தந்தையுமானவர்.

- ஒரு சந்தர்ப்பத்தில், நபி (ஸல்) அவர்கள் கஃபாவின் முன்பு குர்ஆனை ஓதிக் கொண்டிருந்தார்கள். அப்போது அவ்வழியாக சென்ற அல் வலீதுக்கு குர்ஆனை கேட்கும் வாய்ப்பு கிடைத்தது. அவர் அதில் மயங்கி, நபி (ஸல்) அவர்கள் முடிக்கும் வரை அங்கிருந்து நகராமல் கேட்டுக்கொண்டிருந்தார்.

- அதன்பின் அவர் குர்ஆனைப் பற்றி பாராட்டிக் கூறியது காட்டுத்தீ போல் பரவியது. அவர், ''குர்ஆனின் வார்த்தைகள் எல்லாவற்றையும் மிஞ்சிவிட்டது, அதை எதுவும் மிஞ்சவில்லை. நான் இதுபோன்ற ஒன்றை இதுவரை கேட்டதில்லை'' என்று கூறினார்.

- இதைக்கேட்ட மக்கா மக்கள் பீதி அடையத் தொடங்கினர். மக்காவின் தலைசிறந்த கவிஞர் குர்ஆன் ஓதுவதைக் கேட்டு விட்டு தனது தோல்வியை ஒப்புக்கொண்டுவிட்டார்.

- இந்தச் செய்தி அபூஜஹ்லுக்கு எட்டியதும். அவன் அல் வலீதிடம் இதைப்பற்றி கேட்கவேண்டும் என எண்ணினான்.

- அபூஜஹ்ல் அவரிடம் சென்று, ''நீங்கள் குர்ஆனைப் புகழ்ந்து கூறியதை உங்கள் மக்கள் கேள்விப்பட்டிருக்கிறார்கள். மேலும், நீங்கள் நபி (ஸல்) அவர்களை விட்டு விலகாதவரை அம்மக்கள் உங்களைப் பற்றி திருப்தியடைய மாட்டார்கள்'' என்று கூறினான்.

- அல்வலீத் ஒரு புகழ்பெற்ற அரசியல்வாதி. தனக்கு ஏற்படும் அழுத்தத்திற்கு அடிபணியும் குணமும் உண்டு. அவர் உடனடியாக சரணடைந்து,



அபூஜஹ்லிடம் தான் என்ன சொல்ல வேண்டும் என்று கேட்டார்.

- அல்வலீத் வீட்டில் கூடியிருந்த மற்ற குரைஷித் தலைவர்களும் நபி (ஸல்) அவர்களை அவமானப்படுத்துவது பற்றி விவாதிக்கத் தொடங்கினர்.

- சிலர் நபி (ஸல்) அவர்களை ஜோசியக்காரர் என்றும், சிலர் ஜின்கள் பிடித்திருக்கும் மனிதர் என்றும் அழைக்க விரும்பினர். சிலர் அவரை கவிஞர் என்று அழைக்க விரும்பினர். வேறு சிலர் அவர் சூனியம் செய்வதாக குற்றம்சாட்ட விரும்பினர்.

- அல்வலீத் அதற்கு உடன்படாமல், ''ஒரு வலுவான கருத்துடன் மக்களிடம் செல்ல வேண்டும். இல்லையெனில் நாம், மக்கள் மத்தியில் நம்பிக்கையை இழக்க நேரிடும்'' எனக் கூறினார்.

- எனக்கு சிறிது காலம் அவகாசம் கொடுங்கள். நாம் அனைவரும் மக்களிடம் எடுத்துச்செல்ல ஒரு அருமையான கருத்தைக் கொண்டு வருகிறேன்'' என்றார்.

- சில நாட்கள் யோசித்த பிறகு, அல்வலீத் யதார்த்தமாக உள்ள ஒரு கருத்தை சமர்ப்பித்தார்.

- ''நபி (ஸல்) அவர்கள் ஒரு மந்திரவாதி. அவரது செய்தியின் மூலம், மனிதனை அவரது தந்தை, அவரது சகோதரர், அவரது மனைவி, அவரது குழந்தைகள், மற்றும் அவரது குடும்பத்திலிருந்து பிரிக்கிறார்'', என்பதுதான் அந்த குற்றச்சாட்டு.

- நபி (ஸல்) அவர்களை மந்திரவாதி என்றும், அவர் சொல்வதைக் கேட்டால் தங்கள் குடும்பம் பிரிந்துவிடுமோ என்ற அச்சத்தையும் மக்களிடையே உருவாக்க, இந்தக் கருத்தை மக்களிடம் பரப்பத் தொடங்கினர்.

- அல்வலீதின் இந்த செயல்களை குர்ஆனில் அல்லாஹ் சக்திவாய்ந்த ஸூரா அல் முத்தத்தீர் வசனங்கள் மூலம் கடுமையாக கண்டித்துள்ளான்.

- ''என்னையும், நான் தனித்தே படைத்தவனையும் (வலீத் இப்னு முகீரா) விட்டுவிடும். இன்னும், அவனுக்கு ஏராளமான செல்வத்தையும் கொடுத்தேன். அவனுடன் இருக்கக்கூடிய புதல்வர்களையும் (கொடுத்தேன்).

இன்னும், அவனுக்கு (வசதியான) தயாரிப்புகளை அவனுக்காகத் தயார் செய்து வைத்தேன். பின்னரும், அவனுக்குச் செல்வங்களை) நான் அதிகமாக்க வேண்டுமென்று அவன் ஆசைப்படுகிறான். அவ்வாறில்லை! நிச்சயமாக அவன் நம் வசனங்களுக்கு முரண்பட்டவனாகவே இருக்கின்றான்.

விரைவிலேயே, அவனைக் கடினமான ஒரு சிகரத்தில் ஏற்றுவேன். நிச்சயமாக அவன் (குர்ஆனுக்கு எதிராகச்) சிந்தித்தான்; இன்னும், முடிவெடுத்தான். அவன் அழிவானாக! எப்படி அவன் முடிவெடுத்தான்? பின்னரும், அவன் அழிவானாக! எப்படி அவன் முடிவெடுத்தான்?

பிறகு, (குர்ஆனின் வசனங்களை) அவன் நோட்டமிட்டான். பின்னர், (அது பற்றிக் குறைகூற இயலாதவனாக) கடுகடுத்தான்; இன்னும், (முகம்) சுளித்தான். அதன் பின்னர், (சத்தியத்தை ஏற்காமல்) புறமுதுகு காட்டினான்; இன்னும், பெருமை கொண்டான். அப்பால் அவன் கூறினான்:

‘‘இது (பிறரிடமிருந்து கற்றுப்) பேசப்படும் சூனியமே அன்றி வேறில்லை’’. ‘‘இது மனிதனின் சொல் அல்லாமலும் வேறில்லை’’ (என்றும் கூறினான்). அவனை நான் சகர் (என்னும்) நரகில் புகச்செய்வேன். சகர் என்ன என்பதை உமக்கு எது அறிவிக்கும்? அது (எவரையும்) மிச்சம் வைக்காது; விட்டுவிடவும் செய்யாது. (அது) மனிதர்களை (எரித்துத் தோலை) மாற்றிவிடும். அதன்மீது பத்தொன்பது (வானவர்கள் நியமிக்கப்பட்டு) இருக்கின்றனர்’’. ஸூரா அல்முத்தத்தீர் (74: 11-30).